**எம்பீஎஸ்எல் இன்சுரன்ஸ் கம்பனி லிமிட்டட்– 2016**

எம்பீஎஸ்எல் இன்சுரன்ஸ் கம்பனி லிமிட்டட் கம்பனியின் (''கம்பனி''), கம்பனி 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்றுக்கள் மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்றுக்கள், உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்றுக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கமைய கம்பனியின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் மீளாய்வாண்டிற்கான கம்பனியின் செயலாற்றல் தொடர்பான எனது அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. பொதுத்துறையிலுள்ள பட்டயக் கணக்காயளர்கள் நிறுவனமொன்றின் மூலம் நான் உதவியைப் பெற்றிருந்தேன்.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான சபையின் பொறுப்பு**

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென சபை நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு பணிப்பாளர் சபை (''சபை'') பொறுப்பாக உள்ளது.

**1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு**

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் கம்பனியின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. சபையினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் சபையினால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

----------------------------

### 2.1 அபிப்பிராயம்

---------------------

கம்பனியின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.1.1 ஏனைய சட்டரீதியான மற்றும் பிரமாணரீதியான தேவைப்பாடுகள் மீதான அறிக்கை

---------------------------------------------------------------------------------------------------------------------------------------------

- 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் 163(2) ஆம் பிரிவின் மூலம் வேண்டப்பட்டவாறு, நான் பின்வருமாறு குறிப்பிடுகின்றேன்.

(அ) அபிப்பிராயத்திற்கான அடிப்படையும் கணக்காய்வின் நோக்கெல்லையும் வரையறைகளும் மேற்குறிப்பிடப்பட்டவாறு உள்ளன.

(ஆ) நான் அபிப்பிராயப்படுவதாவது,

- கணக்காய்விற்கு அவசியமான சகல தகவல்களையும் விளக்கங்களையும் நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என்பதுடன் இதுவரையான எனது பரீட்சிப்பின் மூலம் தென்படுகின்றவாறு முறையான கணக்கீட்டுப் பதிவேடுகள் கம்பனியால் வைத்திருக்கப்படுகின்றன என்பதும்,

- 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் 151 பிரிவின் தேவைப்பாடுகளுடன் கம்பனி நிதிக்கூற்றுக்கள் இணங்குகின்றன என்பதும் ஆகும்.

எவ்வாறாயினும் கம்பனியின் தேறிய சொத்துக்கள் கூறப்பட்ட மூலதனத்தின் அரைவாசியினைவிடக் குறைவாகக் காணப்படுகின்றதுடன் 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் 220 ஆம் பிரிவின் பிரகாரம் மூலதன நிலைமையில் தீவிர இழப்பொன்றை முகங்கொடுக்கின்றமை இங்கு குறிப்பிடப்படல் வேண்டும்.

- நிதிக்கூற்றுக்களுக்கான 33 ஆம் குறிப்பில் கலந்துரையாடப்பட்டவாறு, 2011 இன் 03 ஆம் இலக்க காப்புறுதி தொழிற்துறையின் பிரமாணங்கள் அதிகாரச்சட்டத்தின் (திருத்தப்பட்டது) 53 ஆம் பிரிவின் பிரகாரம், கம்பனியினால் மேற்கொள்ளப்படுகின்ற நீண்டகால காப்புறுதி வியாபாரம் மற்றும் பொது காப்புறுதி வியாபாரம் என்பவற்றை இரண்டு தனியான கம்பனிகளுக்கு பிரித்திருக்கவில்லை.

- 2000 இன் 43 ஆம் இலக்க காப்புறுதி தொழிற்துறையின் பிரமாணங்கள் அதிகாரச்சட்டத்தின் 47(2) ஆம் பிரிவினால் வேண்டப்பட்டவாறு, எனது பரீட்சிப்பிலிருந்து தென்படுவதாவது, இலங்கை காப்புறுதி சபையினால் வழங்கப்பட்ட விதிகளினால் வேண்டப்பட்ட வகையில் கம்பனியின் கணக்கீட்டு பதிவுகள் பேணப்பட்டிருந்தமையினால், கம்பனியின் நிதி நிலைமை உண்மையானதும் நியாயமானதுமான தன்மையினை சுட்டிக்காட்டுகின்றது.

எவ்வாறாயினும், நிதிக்கூற்றுக்களுக்கான 33 ஆம் குறிப்பில் வெளிப்படுத்தப்பட்டுள்ளவாறு, மூலதன போதுமை விகிதம் மற்றும் மொத்த மூலதனக் கிடைப்பனவிற்காக 2000 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க காப்புறுதி தொழிற்துறையின் பிரமாணங்கள் அதிகாரச்சட்டத்தினால் வேண்டப்படும் அதிஇழிந்த தேவைப்பாட்டு தொகுப்பினை (Thresholds Set) ஆயுளற்ற (Non-life) வியாபாரம் பூர்த்தி செய்திருக்கவில்லை. மொத்த மூலதனக் கிடைப்பனவிற்காக வேண்டப்படும் அதிஇழிந்த தேவைப்பாட்டு தொகுப்பு ஆயுள்

வியாபாரங்களின் போது ‘‘கடன்கொடுத்து தீர்க்கும் எல்லை (இடர் அடிப்படையிலான மூலதனம்) விதிகள் 2015’’ பூர்த்திசெய்திருக்கவில்லை.

**2.2 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

2000 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க காப்புறுதி தொழிற்துறை அதிகாரச்சட்டத்தின் பிரகாரம், மூலதன போதுமை விகிதம் மற்றும் மொத்த கிடைக்கக்கூடிய மூலதனத்திற்காக வேண்டப்படும் அதிஇழிந்த தேவைப்பாட்டு தொகுப்பு (Thresholds set) கம்பனியின் ஆயுள்ள (Non-life) வியாபாரம் மற்றும் ஆயுள் வியாபாரத்தினால் பூர்த்திசெய்யப்பட்டிருக்கவில்லை. அதன் விளைவொன்றாக, கம்பனியின் அனுமதிப்பத்திரம் இடைநீக்கப்பட்டிருந்ததுடன் 2016 ஒக்தோபர் 04 இல் இருந்து புதிய காப்புறுதி கொள்கைகளினை விநியோகிப்பதற்கு கம்பனிக்கு முடியாது காணப்பட்டது.

**3. நிதிசார் மீளாய்வு**

**3.1 நிதிசார் விளைவு**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான கம்பனியின் தொழிற்பாடுகளினை முன்னைய ஆண்டிற்கான ரூபா 100,568,000 வரிக்கு முன்னரான தேறிய நட்டத்துடன் ஒப்பிடுகையில் ரூபா 220,524,000 வரிக்கு முன்னரான தேறிய நட்டமொன்றை விளைவித்திருந்தமையினால், கம்பனியின் நிதி விளைவுகளில் ரூபா 119,956,000 ஆன மேலுமொரு பற்றாக்குறையினை சுட்டிக்காட்டுகின்றது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் போது நலன்கள் மற்றும் உரிமைக்கோரிக்கைகளின் (Claims) செலுத்துகைகள் அதிகரித்திருந்தமை மற்றும் 2016 ஒக்தோபர் 04 இல் இருந்து கம்பனியின் அனுமதிப்பத்திரம் இடைநிறுத்தப்பட்டுக் காணப்பட்டமை நிதிசார் விளைவுகளில் இந்த பற்றாக்குறைக்கு பிரதான காரணங்களாக தாக்கமளித்திருந்தது.

**3.2 பகுப்பாய்வு நிதிசார் மீளாய்வு**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) விற்பனைகள் மற்றும் சந்தைப்படுத்தல் நபர்களின் பற்றாக்குறை காரணமாக முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 3,616 கொள்கைகள் அல்லது 82 சதவீதத்தினால் ஆயுள் காப்புறுதி கொள்கைகளின் காப்பீட்டு செலுத்துகைகள் குறிப்பிடத்தக்களவு காலங்கழிந்திருந்தது.

(ஆ) 2013, 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளுக்கான மொத்த காப்பீட்டின் பெறுமதி முறையே ரூபா 1,414,107,678, ரூபா 1,261,486,287 மற்றும் ரூபா 1,436,431,766 ஆகக் காணப்பட்ட போதிலும், 2016 ஆம் ஆண்டிற்காக மதிப்பிடப்பட்ட பெறுமதி ரூபா 2,600,000,000 ஆகக் காணப்பட்டதுடன் அது 2016 ஆம் ஆண்டிற்கான உள்ளபடியான பெறுமதியினை விட ரூபா 1,355,241,000 இனால் மிகைத்திருந்தது. ஆகையினால், 2016 ஆம் ஆண்டிற்கான ஆயுள் மற்றும் பொது காப்புறுதி வியாபாரங்களிலிருந்து மொத்த எழுதப்பட்ட காப்பீட்டினை எதிர்வுகூறும்பொழுது யாதார்தமான மதிப்பீடுகளினை தயாரிப்பதற்கு கவனஞ்செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) கம்பனியினால் 2016 ஆம் ஆண்டிற்கு வரிக்கு பின்னரான ரூபா 50 மில்லியன் இலாபமொன்றை உழைப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் வரிக்கு பின்னரான ரூபா 231 மில்லியன் நட்டமொன்று ஏற்பட்டிருந்தது. முன்னைய ஆண்டிற்கான ரூபா 109 மில்லியன் தொடர்புடைய நட்டத்தினை ஒப்பிடுகையில் வரிக்கு பின்னரான நட்டம் ரூபா 122 மில்லியன் அல்லது 112 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவு அதிகரித்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

#### 4.1.1 செயற்பாடும் மீளாய்வும்

எம்பீஎஸ்எல் இன்சுரன்ஸ் கம்பனி லிமிட்டட்டினால் விநியோகிக்கப்பட்ட வருடாந்த அறிக்கையின் பிரகாரம், கம்பனியினால் அடைந்துகொள்ளப்படவேண்டிய 07 பிரதான நோக்கங்கள் குறிப்பிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், ஆண்டிற்கான அடைவுகளினை மதிப்பிடுவதற்கான தகவல் கணக்காய்விற்கு கிடைக்கக்கூடியதாக மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 4.2 சொத்துக்கள் முகாமைத்துவம்

கணனி மற்றும் உதிரிப்பாகங்கள், அலுவலக உபகரணம் மற்றும் தளபாடம் மற்றும் பொருத்துக்களினை உள்ளடக்கிய 128 சொத்து வகைகளின் பற்றாக்குறையொன்று மீளாய்வாண்டின் அளவைச் சபை அறிக்கையினால் அவதானிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், இது தொடர்பில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 கணக்காய்வுக் குழு

கணக்காய்வுக் குழு மூன்று சுதந்திரமான நிறைவேற்றுத் தரமல்லாத பணிப்பாளர்களினை கொண்டிருக்கவேண்டியதுடன் ஊதியக் குழு இரண்டு சுதந்திரமான நிறைவேற்றுத் தரமல்லாத பணிப்பாளர்களினை கொண்டிருத்தல் வேண்டும். எவ்வாறாயினும், ஆண்டின் போது சபையில் தொடர்ச்சியான மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டமையின் காரணமாக 2016 ஆம் ஆண்டிற்கான கணக்காய்வுக் குழு மற்றும் ஊதியக் குழுக்கான உறுப்பினர்கள் கம்பனியினால் நியமிக்கப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கம்பனியினால் வழங்கப்பட்ட செயலாற்றல் முறிகளுக்கு, செயலாற்றல் முறிகள் மற்றும் போதுமான மீள்காப்புறுதி மேவுகை பெறப்பட்டிருக்கவில்லை. ஆகையினால், இடர் சம்பந்தமான அடையாளப் பரப்பு தொடர்பில விசேட கவனம் தேவைப்படுகின்றது.